ஆகவே இது மிக முக்கியமான சட்டம் அந்தத் திருத்தம் முக்கியமாக தேவைப்படுகிறது என்கிற காரணத்திற்காக இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பைச் செல்திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (உள்ளூர் செஸ் மேல்வரி விதிப்பை செல் திறனாக்குதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஊ) இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன் வடிவு 1982

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

---

* 1982 மார்ச் 30 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1982 ஏப்ரல் 5]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மை (தமிழ்நாடு திருத்த) சட்ட முனவடிவு (சட்டமன்றப் பேரவை சட்டம் முன்வடிவு எண் 27/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

7. அரசினர் தீர்மாணம்

விதி 30- ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30 (3)-ன்கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்பதன் கீழ் வரிசை எண் (v)-ல் உள்ள தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1980) (ஆய்வுக்குழு திருத்திஅமைத்தவாறு) என்பதைத் தள்ளி வைத்து விட்டு அடுத்து இனம் உள்ள 5-ல் நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றது.

ஒரு மணி நேர விவாதம்.

சேது சமுத்திர திட்டம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதம். திரு. செ. சிவசாமி விவாதத்தைத் துவக்கி வைப்பார்கள்.

திரு. செ. சிவசாமி: துணைத் தலைவர் அவர்களே. கீழ்க் கண்ட நிர்வாகம் பற்றிய அவசரப் பொருள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேற்படாத குறுகிய கால விவாதத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென மொழிகிறேன்:

''சேது சமுத்திரத் திட்டத்தை மீண்டும் அமுல் நடத்த அண்மையில் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளதாலும், தமிழ்நாடு பொருளாதார ரீதியில் நன்மை அடைவதாலும் ஆயிரக்கணக் கானவர்களுக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கக் கூடியதாக இருப்பதாலும், கடலோர நீர்ப்போக்குவரத்து அதிகரிக்க சந்தர்ப்பமிருப்பதாலும், பெருங்கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக் கொண்டு வராமல் குறுக்கு வழியில் வருவதால் சிக்கனம் ஏற்படு வதாலும் மேற்படித் திட்டம் உடனடியாக எடுத்துக் கொள்ளப் வேண்டும்''.